# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2488/03 - 2026 මැයි මස 11 වැනි සඳුදා - 2026.05.11**

2488/03 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகம்**

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் (இதன் பின்னர் “சட்டம்” எனக் குறிப்பிடப்படும்) 53ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டும், அமைச்சரவையின் அனுமதியைப் பின்பற்றியும், இக் கட்டளையின் மூலம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:-

(அ) அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரின் வணிகத்தை, செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாகப் பெயரிடுவதற்கு 2026.05.04 ஆம் திகதியிட்ட 26/0862/804/111 இலக்கத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது;

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகத்தை முன்னெடுத்துச் செல்லும் விண்ணப்பதாரரின் பெயர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்;

(இ) குறித்த வணிகத்தை ஒரு செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாக கருதுவதற்கான தர்க்கரீதியான காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்; மற்றும்

(ஈ) குறித்த சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை III இல் குறிப்பிட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் என்பதுடன், அவை இவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டு குறித்த திகதிகளில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு,
2026, மே 11.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாக
நியமிக்கப்பட்ட வணிகத்தின் விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரியின் பெயர் | ஹோம் லேண்ட்ஸ் போர்ட் சிட்டி (பிரைவட்) லிமிடெட்<br>(HOME LANDS PORT CITY (PVT) LTD) | |
| 2. | அங்கீகரிக்கப்பட்ட நபரின் அனுமதிப்பத்திர இலக்கம் | CPCEC/2026/0203 | |
| 3. | அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதி | 2026, ஏப்பிறல் 15 | |
| 4. | தகைமை அளவுகோல்கள் | 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் 20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு வரிவிலக்குகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குதல் தொடர்பான வழிகாட்டல்கள்) ஒழுங்குவிதிகளின், ஒழுங்குவிதி 3 – வகைப்படுத்தல் ‘A’ இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள். | |
| 5. | காணி குத்தகைச் செயற்பாட்டுக் காலம் | மேலே குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர், இவ் வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதகாலப் பகுதிக்குள், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழுவுடன் 1-01-01ஆம் இலக்க காணித்துண்டிற்கான நிலக் குத்தகை உடன்படிக்கையை செய்துகொள்ள தவறும் பட்சத்தில், அவருக்கு வழங்கப்பட்ட செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகம் எனும் தகுதி செல்லுபடியற்றதாக்கப்படும். | |
| 6. | காணித்துண்டின் குறியீடு | 1-01-01 | |
| 7. | காணித்துண்டின் பரப்பளவு (சதுர மீற்றர்) | 12,527.80 | |
| 8. | நிலப்பயன்பாடு | கலப்பு பயன்பாடு 1 | |
| 9. | முன்மொழியப்பட்ட முதலீடு – காணிக் குத்தகை | இ.ரூபா 12,558,339,769 | |
| 10. | முன்மொழியப்பட்ட முதலீடு -அபிவிருத்தி | அ.டொ. 110,000,000 | |
| 11. | வேலை வாய்ப்புகள் | 447 | |
| 12. | திட்ட அமுலாக்க காலம் (வருடங்கள்) | 5 வருடங்கள் | |
| 13. | முன்மொழியப்பட்ட மொத்த முதலீடு | வருடம் 1 | இ.ரூபா. 3,139,584,942<br>அ.டொ. 10,645,161 |
| | | வருடம் 2 | இ.ரூபா. 1,883,750,965<br>அ.டொ. 13,548,387 |
| | | வருடம் 3 | இ.ரூபா. 2,511,667,954<br>அ.டொ. 20,000,000 |
| | | வருடம் 4 | இ.ரூபா. 2,511,667,954<br>அ.டொ. 32,903,226 |
| | | வருடம் 5 | இ.ரூபா. 2,511,667,954<br>அ.டொ. 32,903,226 |
| | | மொத்தம் | இ.ரூபா. 12,558,339,769<br>அ.டொ. 110,000,000 |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாகக் கருதுவதற்கான தர்க்கரீதியான காரணங்கள்

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53(5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளான தேசிய நலன் அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை நிறுவுதலின் வெற்றியை உறுதி செய்வதற்காக, இவ்வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக பெயரிடும்போது குறித்த சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் நோக்கங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள இரட்டைக்கோபுர அபிவிருத்தித் திட்டம் என்பது, கொழும்புத் துறைமுக நகருக்குள் திட்டமிடப்பட்டுள்ள ஒரு உருமாற்றமடையச் செய்யும் சூழல்சார் ஆடம்பரக் குடியிருப்புகள் சார்ந்த செயற்திட்டமாகும். இது இலங்கையின் முதலாவது பாரிய அளவிலான செங்குத்து காடு உயர்மாடி குடியிருப்புச் சமூகமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஹோம் லேண்ட்ஸ் போர்ட் சிட்டி (தனியார்) நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்படும் இச்செயற்திட்டம், உலகளாவிய ரீதியில் போட்டியினை ஏற்படுத்தக்கூடிய ஒரு விசேட பொருளாதார மண்டலத்திற்குள், அறிவுத்திறன், புத்தாக்கம் மற்றும் முதலீட்டுத் தரத்திலான அசையாச் சொத்துக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அடுத்த தலைமுறைக்கான நகர்ப்புற வாழ்வாதார மாதிரி மற்றும் சூழல்சார் கட்டிடக்கலையினை அறிமுகப்படுத்துகின்றது. இக்கட்டிட வடிவமைப்பானது “செங்குத்து நகர்ப்புறக் காடு” எனும் கருப்பொருளின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன், இச்சூழலியல் பார்வைக்கு இணங்கக்கூடிய அதீத ஆடம்பர வசதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

## அட்டவணை III

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 1 | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | கூட்டுத்தாபன வருமான வரியிலிருந்து அனைத்து ஆதாயங்கள் மற்றும் இலாபங்களுக்குமான வரிவிலக்கு | திட்ட அமுலாக்கக் காலப்பகுதி நிறைவடைந்தவுடன் | திட்ட அமுலாக்கக் காலப்பகுதி முடிவடைந்த திலிருந்து எட்டு ஆண்டுகளில் |
| 2 | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப் பட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 3 | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 4 | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 5 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

**அட்டவணை III** *(தொடர்ச்சி)*

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 6 | சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | திட்ட அமுலாக்கக் காலப்பகுதியின் போது |
| 7 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி களுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | திட்ட அமுலாக்கக் காலப்பகுதியின் போது |
| 8 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | திட்ட அமுலாக்கக் காலப்பகுதியின் போது |
| 9 | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 10 | 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர் வேலை நிறுத்தம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 11 ஆம் பிரிவு மற்றும் 12 ஆம் பிரிவு ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது |
| 11 | பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிலிருந்து விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது |

**அட்டவணை III** (*தொடர்ச்சி*)

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 12 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆம் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அந்நியச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரத்திலான முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் நீங்கலாக, இச்சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது |
| 13 | 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்ட தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

EOG 05 - 0174

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.